## பணியின்போது இறந்த

# தொழிலாளி குடும்பத்துக்கு உதவித்தொகை

**திருப்பூர், அக். 29:** திருப்பூரில் உள்ள பனியன் நிறுவனத்தில் மோகன பிரகாஷ் (35), என்பவர் தொழிலாளியாக பணியாற்றி வந்தார். இந்நிலையில், மோகன பிரகாஷ் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 5ம் தேதி பணியில் இருந்த போது நெஞ்சு வலியால் இறந்தார். இவர் பணியாற்றிய நிறுவனத்தில் இவருக்கு இஎஸ்ஐ. உள்ளிட்ட அனைத்தும் பதிவு செய்யப்பட்டிருந்தது. இதனால், இஎஸ்ஐ சார்ந்தோர் உதவித்தொகை பெற மோகன பிரகாஷ் தகுதி அடைந்தார்.

அதன் அடிப்படையில் இஎஸ்ஐ மற்றும் பனியன் நிறுவனம் சார்பில் இதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது. இதற்கிடையே நேற்று திருப்பூரில் நடந்த குறைதீர்க்கும் கூட்டத்தில் உதவித்தொகைக்கான ஆணையை கிளை மேலாளர் நித்யா மோகன பிரகாஷ் பெற்றோரிடம் வழங்கினார், இதில் நிலுவைத்தொகை ரூ.48,960 வழங்கப்பட்டது. மாதந்தோறும் சார்ந்தோர் உதவித்தொகை ரூ.2,700 வழங்கப்பட இருக்கிறது.




பணியின்போது இறந்த தொழிலாளியின் குடும்பத்தாருக்கு இஎஸ்ஐ சார்ந்தோர் உதவித்தொகைக்கான ஆணையை மேலாளர் நித்யா வழங்கினார்.